In the Court of the Subordinate Judge, Srivaikutham
Case No : SC. 228/2019
Deposition of P.W. 7
****

Name திரு.வெங்கடேசன்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 05th day of March 2026.

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச 317 மனுவின்கீழ் மனு அனுமதிப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கோட்டை பட்டணம் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09.10.2017 அன்று திருவைகுண்டம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தேன். இரவு சுமார் 23.30 மணிக்கு திருவைகுண்டம்காவல் நிலைய பயிற்சி உதவி ஆய்வாளர் திரு.சிவக்குமார் என்பவர் கொடுத்த எழுத்துமூலமாக புகார் மனுவை பெற்றுஅதன் அடிப்படையில் திருவைகுண்டம் காவல் நிலைய குற்ற எண்.329/2017 ன் கீழ் 294(பி), 353, 307, 506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவ்ல அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். விசாரணை நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.10.2017 அதிகாலை 00.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சம்பவ சாட்சிகள் மலையாண்டி என்கிற குட்டி, எட்வின் ஆகியோர் முன்பாக மின்விளக்கு டார்ச் விளக்கு வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும்

மாதிரிவரைபடம் தாயார் செய்தேன். அவை முறையே அ.சா.ஆ.7 மற்றும் 8 ஆகும். பின்னர் பார்வைமகஜர் சாட்சிகளையும் சாட்சிகள் சிவக்குமார் பயிற்றி உதவி ஆய்வாளர், முருகன் தலைமைக்காவலர் 2398 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை தேடி வந்தபோது ஆதிச்சநல்லூர் என்ற ஊரில் எதிரி பரமசிவனுக்கு சொந்தமான செங்கல் சேம்பர் மற்றும் தோட்டத்தில் மறைத்திருந்த எதிரி பரமசிவனை போலிஸ் பார்ட்டிகள் முன்னிலையில் மடக்கி பிடித்து காலை 8மணிக்கு காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் இசக்கி, கணேசன் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 8.30 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காண்பித்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அதன் அடிப்படையில் எதிரி பரமசிவன் அவர் சொன்ன இடத்தில் ஒரு ரூமில் இருந்து அடையாளம் காண்பித்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய சுமார் 33 செ.மீ இரும்பு பகுதியும் 11 செ.மீ மரக்கைப்பிடியும் கொண்ட மொத்தம் 44 செ.மீ நீளமுள்ள இரும்பு கொக்கியுடன் கூடிய வெட்டருவாள் ஒன்றை ஆஜர் படுத்தினார். அதனை அதே சாட்சிகள் முன்பாக அத்தாட்சி பிறப்பித்து9.45மணிக்கு கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9, அத்தாட்சி அ.சா.ஆ–10. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கோட்டை பட்டணம் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்ம் 91 அ.சா.ஆ.11. பின்னர் 2.12.2017 அன்று இவ்வழக்கின் இவ்வழக்கின் 2வது எதி காசி என்ற குண்டுகாசி என்பவரை வெள்ளுர் சர்ச்

அருகே 13.00 மணிக்கு கைது செய்து 13.35 மணிக்கு நிரைலயம் வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். மற்றொரு எதிரியான இசக்கி பாண்டி தலைமறைவாக இருப்பதால் புலன் விசாரணை செய்து 27.7.2018ம் தேதி மேற்சொன் பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையின் போது சாட்சிகள் இசக்கி கணேசன், மலையாண்டி எட்வின் ஆகியோர்கள் நான் பதிவு செய்துள்ள 161 பிரிவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 புகார் மனுவில் 09.10.2017 அன்றுஇரவு 22.00மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவானது 23.30 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 1 1/2 மணி நேரம் தாமதமானது என்றால் சரிதான். குற்றம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் அ.சா.1ம் அ.சா.2ம் வேறு எங்கும் ரோந்துப்பணிக்கு சென்றதாக எனது விசாரணைக்கு துலங்காது என்றால் சரிதான். வழக்கில் நடந்ததாக சொல்லும் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்திலிருந்து அ.சா.1,2 சம்பவம் நடந்ததாக எனக்கு தகவல் சொன்னதாக விசாரணையின் துலங்குமா என்றால் துலங்காது ஆனால் தொலைபேசியில் தகவல் சொன்னார்கள். தொலைபேசியில் தகவல் சொன்னதாக செல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நடந்ததாக சொல்லும் சம்பவம் குறித்தம் பொது மக்களுக்கு இடையூறு செய்ததாகவும் பொது மக்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. யாரும் புகார் கொடுக்க முன்வரவில்லை. பொதுமக்களை விசாரணை செய்ததாகவும்அவர்கள் புகார் கொடுக்க முன் வரவில்லை என்றும் அந்த விசாரணையில் வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் நான் பதிவு செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதி குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தின் அருகே ஆனந்தவள்ளி அம்மன் கோவில் தெரு, மூப்பனார் கோவில் தெரு, பெரியபள்ளிவாசல் தெற்கு தெரு உள்ளன என்றால் சரிதான். அந்த பகுதியில் சுமார் 200 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த பகுதியில் குடியிருக்கும்

நபர்கள் யாரும் எதிரிகள் அந்த இடத்தில் அமர்ந்து மது அருந்திவிட்டு தகராறு செய்தார்கள் என எழுத்துமூலமாக புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை தொலைபேசியில் சொன்னார்கள். தொலைபேசி எண்ணை பதிவு செய்தேனா என்றால் தகவல் அறியும் விவரம் ரகசியமாக வைக்கப்படும். ரகசிய தகவல் கிடைத்ததாக பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் அ.சா.1,2ஐ அருவாளை கொண்டு அருவாளைக்கொண்டு வெட்ட முயற்சித்தபோது அந்த வெட்டு அருகில் இருந்த இரு சக்கர வாகனத்தில் பட்டு சிதறியது என புகாரில்சொல்லப்பட்டுள்ளது. சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த மகஜரில் அந்த இரு சக்கர வாகனம் கிடைத்ததாக பதிவு செய்தேனா என்றால் இல்லை. அதை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அது யாருடைய வாகனம் என்றால் விசாரணையில் தெரியவரவில்லை. அந்த வாகனத்தை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1ஐ வெட்டும் போது அந்த வெட்டு அருகில் இருந்த இரு சக்கர வாகனத்தில்பட்டு சிதறியதாக புகாரில் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி அம்மன் கோவில் தெரு, மூப்பனார் கோவில் தெரு, பெரியபள்ளிவாசல் தெற்கு தெருவில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் சாட்சியாக விசாரித்தேன். அவர்கள் சாட்சி சொல்ல முன்வரவில்லை. அவ்வாறே சாட்சிகளை விசாரித்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. பார்வைமகஜர் வரைபடம் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்தேன் என்றால் சரியல்ல. சாட்சிப்பட்டியலில் சொல்லியிருக்கிற இசக்கி, கணேசன், மலையாண்டி, எட்வின் ஆகியோர்களுக்கும் சம்பவ இடத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அதில் சாட்சியாக குறிப்பிட்டிருக்கும் அனைவருமே சம்பவ இடத்திற்கு 6 கி.மீ தள்ளியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து வெள்ளூர் கிராமம் 7,8 கி.மீ என்றால் சரியல்ல. சாட்சி எட்வின் கால் ஊனமுற்ற நபர் என்று சொன்னால் சரிதான். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நிலையத்தில் சரித்திர பதிவேட்டில் உள்ளவர்கள். நான் சொன்னமாதிரி எந்த சம்மபவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகள்

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றி ஆயுதங்கள் எடுத்துக்கொடுத்தார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல. அந்த ஆயுதங்கள் எல்லாம் வேறு வழக்கிற்காக கைப்பற்றப்பட்டு இந்த வழக்கிற்காக பொய்யாக புணையப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் அத்தாட்சி எல்லாம் காவல் நிலையத்தில் வைத்து இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை ஒருதலைப்பட்சமாக விசாரணை செய்து குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.03.05 17:20:07 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**